உ

ஸ்ரீரஸ்து

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பர இரகசியம்.

இஃது
ப்ரம்மவித்தியா பத்திராதிபர்
கு. ஸ்ரீநிவாச சாஸ்திரிகளவர்களால்
இயற்றப்பட்டு
சிதம்பரம்
ப்ரம்மவித்தியா அச்சியந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம்பதிப்பு.

விஜய௵ கார்த்திகைமீ

விலை பை 3



உ

கடவுள் துணை.

# சிதம்பர இரகசியம்.

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑌿𑌦𑌂𑌜𑌗𑌤𑍍।
𑌇𑌦𑌂𑌨𑌮𑍋𑌨𑌟𑍇𑌶𑌾𑌯𑌤𑌸𑍍𑌮𑍈𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇॥

இப்பெரும் பூமண்டலத்துள்ளே எல்லா விதத்தாலும் மிகச் சிறப்புற்றோங்கிவிளங்கும் நம் பரதகண்டத்தில் அனேக சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், வேறு பல தேவர்

ஆலயங்களும் இருக்கின்றன. அவைகள் அனைத்திலும் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தூபி, விமானம், பிராகாரம், கோபுரம் என்னும் இவைகள் ஒருதன்மையாகவே காணப்படுகின்றன. இவையின்றி ஒவ்வொரு ஆலயங்களிலும் அவ்வாலயத்தின் பிரதான தேவதாபிம்பம் கர்ப்பக்கிரகத்திலேயே இருக்கின்றது. இங்ஙனம் ஒன்றுபோல் எல்லா ஆலயங்களும் கட்டப்படுவதற்குச் சில முக்கிய காரணங்கள் உள. அவைகளை இங்கே சிறுபான்மை விளக்கிக் காட்டுவாம்:—

உலகத்திலேயுள்ள மாந்தரனைவரும் உண்மேணுக்காக அகப்பொருள்களை அறிந்துய்யும் ஆற்றல் பெற்றவராதலால், யாவர்க்கும் தத்தம் சரீரவியல்பு எளிதிலே புலப்படும்பொருட்டு, ஆலயங்கள் செங்கல், கருங்கற்களால் வெளிநோக்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாலயங்கள் இருதயகமலப்பிரஸ்தாரம் [இருதயகமலத்தை விரித்துக்குறிப்பது] எனவும், சரீரப்பிரஸ்தாரம் [சரீரத்தை விரித்துக்குறிப்பது] எனவும் இருவகைப்படுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இவற்றுள் இருதயகமலப்பிரஸ்தாரத்தாற் சிதம்பர முதலிய சில தலங்களும் சரீரப்பிரஸ்தாரத்தால் வேறு பல தலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனித ருள்ளத்தே சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வொரு வஸ்துக்களும் இருதயகமலப்பிரஸ்தார வாலயங்களாலும், யோகிகளறிய வேண்டிய எழுவகைத் தாதுக்களின் நிலமை சரீரப்பிரஸ்தார வாலயங்கங்களாலும் உருவகமாகக்காட்டப்படும், ஸ்ரீபஞ்சாக்ஷரத்து ஒவ்வொரு எழுத்தின் பொருளென ஆகமங்களில் ஓரோவழி குறிக்கப்பட்ட அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் பஞ்ச

...ரசங்கள் சிவாலயங்களிலே ஐந்து பிராகாரங்களாகவும், ...ணவமொழிந்த ஸ்ரீஅஷ்டாக்ஷரப் பொருளெனப் பாஞ்சராத்திரத்தின் ஓரிடத்துக் கூறப்படும். சரீரத்தி லடங்கிய ரசம், இரத்தம், மாமிசம், மேதை, என்பு, மச்சை, சுக்கிலம் என்னும் சப்த தாதுக்கள் விஷ்ணுவாலயங்களிலே ஏழு பிராகாரங்களாவும் இருக்கின்றன. பிரணவங்கூட்டிற் சிவமந்திரம் ஆறெழுத்தும், நாராயணமந்திரம் எட்டெழுத்துமாகும். சிலவிடங்களிலே ஆலயங்கட்டுவதற்கு இடம் பொருள் குறைவுபடின், அங்கு தூல சூக்கும காரண சரீரங்களைக் குறிக்கும் மூன்று பிராகாரங்களேனும், அனைத்திற்கும் பொதுவாக ஓர் பிராகாரமேனும் அமைப்பதுண்டு. ஒவ்வொரு சரீரத்திலும் யோகிகளறியவேண்டிய மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறுதாரங்கள் இங்கு முறையே கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபமெனக் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கர்ப்பக்கிரகத்திலும் கமலமுகைபோன்ற விமானம் ஒன்றிருக்கும். அதனுட்புறத்திற்றான் கடவுளுடைய திருவுருவம் அமைக்கப்படும். இனி இருதயகமலப் பிரஸ்தார வாலயங்களிலே இருதயத்திலுள்ள விஷயங்கள் விரித்துக் குறிக்கப்படுமென்று முன்னே கூறிய வதற்குச் சிதம்பராலயத்தையே திருஷ்டாந்தமாக எடுத்துநிரூபிப்பாம்.

இச்சிதம்பரக்ஷேத்திர மகிமை புராணங்களிலேமாத்திரம் புகழப்படுவதன்று. வேதத்தும் தரிசனோபநிடதத்திலே "சிதம்பரம் இருதயமத்தியுள்ளது" என்று ஓதப்பட்டிருக்கின்றது. இதனால் இது விராட்புருடனுடைய இருதயஸ்தா

ணமென்பதறிதுணர்பென்க. அதுபற்றியே புராணங்கள் "இ
வாலயங் கட்டும்பொழுது யோகமுதல்வராகிய ஸ்ரீபதஞ்ச
முனிவர் சிதம்பர ரகசியமறிந்து அதனை விசுவகர்மாவுக்கு
அநுக்கிரகிக்க, அவன் அவராணையைச் சிரமேற் கொண்டு
ஆலயஞ்சமைத்தனன்" என்று கூறுகின்றன. ஓர் மகாயோ
கியின் சரீரத்தை வடக்கே தலையும் தெற்கே பாதமுமாக
வைத்துநோக்கின் அதுவும் இவ்வாலய அமைப்பும் ஒத்திரு
க்கும். இவ்வாலயத்தேயுள்ள ஆயிரக்கான்மண்டபம் தலை
யின்புறத்திருக்கும் ஆயிரவிதழுள்ள கமலமென்னப்படும் மூளை
யையும், சிவகங்கை அம்மூளையின் மேல்புறத்துள்ள சந்திர
புஷ்கரணியெனப்படும் அமுதவாபிகையும் உவமையாய்ப்பெ
ற்றிருக்கின்றன. சாக்கிராவஸ்தையிலே ஆன்மாவினுடைய
அறிவு மூளையிலே விளங்குவது இயல்பாதலால், தேவமா
னத்தில் விடியற்காலமும் பிரதோஷகாலமுமாகிய மார்கழி
ஆனிமாசங்களில் ஆயிரக்கான்மண்டபத்திலே ஆனந்த நட
ராஜமூர்த்திக்கு மகாகும்பாபிஷேகம் நடந்துவருகின்றது. இவ
ற்றின் தென்புறத்திலே ஸ்ரீகுருமூர்த்தியும் ஜோதிர்லிங்க
மும் எழுந்தருளி யிருக்குமிடம் விசுத்திஸ்தானமாகப் பாவி
க்கப்படும். அதற்குத் தெற்கே "திருச்சிற்றம்பல" மென்
னும் மகாசபை யிருக்கின்றது, அங்கே பிரம, விஷ்ணு,
ருத்திர, மகேஸ்வர, சதாசிவர்களுக்கென ஐந்து பீடங்க
ளிருக்கின்றன. திருவைந்தெழுத்துக்களைந்தும் ஐந்து படிக
ளாயிருக்கின்றன. அவ்விடத்துள்ள கதவு அவித்தையென
ப்படும் தத்துவ தாதுவிகங்களாகிய தொண்ணூற்றாறு
பதார்த்தங்களும் தொண்ணூற்றாறு பலகணிகளா யிருக்கின்
றன. நடுவிலிருக்கும் நான்கு பொற்கம்பங்கள் நான்கு வே
தங்களும் சுற்றியுள்ள இருபத்தெட்டு மரக்கம்பங்கள் இரு

...த்தெட்டு ஆகமங்களுமாம். இவைகளுள் அடங்கிய இட...தைச்சுத்தவித்தையெனவும், ரகசிய முதலாய் நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடம்வரையில் உள்ளபீடம் பிரணவ பீடமெனவும்படும். அப்பிரணவ பீடத்தின்கண்ணே சகளத்திருமேனியுடைய ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தியெழுந்தருளியிருக்கின்றனர். அதன்பின் வாயுபாகத்தில் சகளநிஷ்களமாகிய வியக்தாவியக்தலிங்கமும், அதன்பின்னே ஆரண ஆகமங்களும் அறிந்தோதவரியதும் குணவரம்பு கடந்ததும் 'திருச்சிற்றம்பலம்'என உயர்ந்தோராற் புகழ்ந்தேற்றப்படுவதுமாகிய, அழியாப்பரசுடர்ச் சிவவொளிச் சிதாகாசவடிவும் விளங்காநிற்கும். இச்சிதாகாசவடிவினையே ஊனக்கண்ணாற்கண்டோர் 'இரகசிய' மென்பர். கர்ப்பக்கிரகமாய் இவ்விடத்தே அகிலலோகமாதாவாகிய 'சிவகாமசுந்தரி' என்னும்பராசத்தியாரோடு தூல நடராஜமூர்த்தியும்,இரத்தினமயமான சூக்கும நடராஜமூர்த்தியும், சூக்குமதரமான மற்றோர் இலிங்கமும் உள்ளன. ரகசியத்தை நிஷ்களமென்றும், வியக்தாவ்யக்தலிங்கத்தைச் சகளநிஷ்களமென்றும், ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தியைச் சகளவடிவமென்றும் உரைக்கப்படும். இன்னும் கீழ்புறத்திலே சண்டேசுவரஸ்தானத்திலே பிரமதேவரும், தென்புறத்திலே விஷ்ணுமூர்த்தியும், வடபுறத்திலே வைரவமூர்த்தியென்னும் சங்கார ருத்திரரும் இருக்கின்றார்கள். விமானத்தின் மேலேயுள்ள ஒன்பது கும்பங்களும் வாமை முதலிய நவசத்திகளாம். அவ்விமானத்திலுள்ள கைமரங்கள் அறுபத்துநான்கும் அறுபத்துநான்கு கலைகளையும், செப்போடுகள் இருபத்தோராயிரத்திருநூறும் மனிதனால் ஒவ்வொரு தினமும் விடப்படுகின்ற சுவாசங்களையும், ஆணிகள் எழுபத்திரயிரமும் அச்சுவாச சஞ்சார ஆதாரமான

எழுபத்திரண்டாயிரம் நாடிகளையும் குறிக்கின்றன. மற்றும் அனேக ரகசியங்கள் முன் விளக்கியவற்றுள் அமைந்தன. இச்சபையின் தென்புறத்தேயுள்ள கனகசபை முற்கூறிய சபையின் அனேகபாகங்களைப்பெற்றதும், பதினெண்புராணங்களைப்பதினெண் கம்பங்களாகப் பெற்றதுமாய், மணிபூரகஸ்தானமாய் விளங்குகின்றது. இங்குள்ள சபைகளைந்தும் ஐவகைக்கோசங்களை யுணர்த்துகின்றன.

அவையாவன:—இராஜசபை (ஆயிரக்கான்மண்டபம்) அன்னமயகோசமும், தேவசபை (பேரம்பலம்) பிராணமயகோசமும், நிர்த்தசபை மனோமயகோசமும், கனகசபை விஞ்ஞானமயகோசமும், சிற்சபை ஆனந்தமயகோசமுமாம். அன்றியும் திரிபுராதந்திரத்திற்சொல்லிய மூன்று கூடங்களும்மூலகூடம், தேவகூடம், ரகசியகூடம் என இங்கு குறிக்கப்பட்டன. மனிதருடைய இருதயம்சரீரத்தின் நடுவிலிராமல் சிறிது இடதுபுறத்தே விலகியிருத்தலால், இங்கும் ஆலயத்தின் சரிநடுவுக்குச் சிறிது இடப்புறத்தே கர்ப்பக்கிரகம் அமைந்திருக்கின்றது. இருதயத்திலே இரத்தம் பிரவேசிக்கும் வழி நேரிலின்றி பக்கங்களிலிருப்பதால், இங்கும் வழிகள் கர்ப்பக்கிரகத்தின் பக்கங்களிலமைந்திருக்கின்றன. இச்சிற்சபையின் தென்புறத்தே மகாவிஷ்ணுஸ்தானமும், அதற்குத் தெற்கே சங்கார நிருத்தமூர்த்தி ஸ்தானமும் அதற்குத் தெற்கே கணபதிஸ்தானமும் தருமவடிவாகிய இடபதேவஸ்தானமும், கோபுரமும் இருக்கின்றன. ஐந்து ஆவரணமதில்களும் ஒரேவித அளவில் அமைந்தன. சரீரத்தினும் பிராணன் பன்னிரண்டங்குலம் அதிகமென்னும் யோகநூற்பிரமாணங்கொண்டே இரண்டாவது மதிலிற் கோபுரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய மகாமேன்மைபொருந்தியது சிதம்பராலயம். இவ்வாலயத்திலே சாஸ்திரவிதிப்படி மெய்யன்போடு சுவாமிதெரிசனஞ்செய்யின் ஞானமுதிக்கும்; பந்தநீங்கும்; பூரணத்துவமுண்டாம்; ஆனந்தம் விளையும்; ஆன்மநிலை விளங்கும்; அத்வைத முத்தி சித்திக்கும்.

இவ்வுண்மைகளை அறியும் அறிவு சிறிதேனும் இல்லாத வேதபாகியர்கள் புன்மொழிகளைக்கேட்டு "இது என்ன கல் மண், செங்கல்தானே" என்று எண்ணலாகாது. ஒருவன் பூகோளத்தைப் படித்தறியவிரும்பி அதற்குத் துணைக்கருவியாய்க் கொண்ட பூகோளபடத்தை "இது ஏதோ கோடுகள்; பூமியன்று" என்று நினைப்பானாயின், அவன் கருத்து முற்றுபெறுவதெவ்வாறு? அப்படத்தையே பூமியென்று நினைத்தாலல்லவோ முற்றுபெறும். அதுபோல இவ்வாலயத்தைக்கண்டவுடனே வேறொன்றும் நினையாது ஏதோ ஒருமகாயோகியின் இருதயகமலமென்றும், கடவுளுடைய திருவருள் இவ்விடத்திலே நிறைந்திருக்கின்றதென்றும், இவ்வித நிலையே முத்திக்கு வழியென்றும் அறிந்து, அவ்வழியைச்சிறிது சிறிதாகப் பற்றுதல் வேண்டும்.

ஆரிய சகோதரர்களே! நம் தேசத்திலுள்ள தேவாலயங்களின் உண்மைகளை நன்றாக ஆராய்ந்தறிந்து கடவுளை இடைவிடாது சிந்தித்து உய்யுங்கள். நாஸ்திகர் கிறிஸ்தவர் முதலாயினோர் வார்த்தைகளைக் கேட்டு மதிமயங்காதீர்கள். நாம் உய்யும்பொருட்டே நம் பெரியோர்கள் அவ்வப்பொழுது எவ்வளவு துன்பம் வரினும் அவைகளுக்குச் சிறிதும் அஞ்சாது நம் அருமையாகிய சமயத்தைக் காத்துவந்தார்கள். அதுபோல் அவர் சந்ததியிற் பிறந்தவர்களாகிய

நீங்களும், உங்கள் உங்களால் இயன்றளவு பிரயாசை
ட்டு நம் சமயத்தைப் பாதுகாத்தருளுங்கள். அப்படிசெ
தாலன்றி நாம் ஆரியர்களாகோம். சகோதரர்களே! உங்
ளுக்கு நல்லறிவும் நற்புகழும் நன்னிலையும் நன்மேனியும் ஐக்கி
யமத்தியமும்கைகூடுமாறு, ஸ்ரீமதானந்தநடன குஞ்சிதபாதன்
திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். சுபமஸ்து.

## சிதம்பரரகசியம்.

## முற்றிற்று.

ப்ரம்மவித்தியாயந்திரசாலையில் விற்பனைக்குத்த
ராகஇருக்கும் புஸ்தகங்கள்.

---

| | |
|---|---|
| மாணிக்கவாசகர்சரித்திரம் | 0—0—6 |
| விபூதிமான்மியம் | 0—0—3 |
| சதாசாரதீபிகை | 0—1—0 |
| ஆன்மாவும்சரீமும் | 0—0—3 |
| மகாதேவமாலை | 0—0—3 |
| இராமலிங்கசுவாமிகள்கீர்த்தனை | 0—0—3 |
| திருமிழிசையாழ்வார்வைபவம் | 0—0—3 |
| சிவசங்கரதீக்ஷிதர்கீர்த்தனம் | 0—0—3 |
| சிவக்ஷேத்திரவிளக்கம் | 0—2—0 |
| சிதம்பரமாகாத்மியம் | 0—4—0 |
| குயிற்பண் | 0—0—3 |
| ஆனந்தநடராஜர்பேரில்ஜாவளி | 0—1—0 |
| சன்மார்க்கபோதினி | 0—0—3 |